**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *405*** **நாள்: *20.08.2026***

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அரசின் உரிய வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வெளிப்படைத்தன்மையுடன் தாமதமின்றி விரைவாக கட்டட அனுமதி பெறுதல் தொடர்பாக பதிவு பெற்ற லைசென்ஸ்டு சர்வேயர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அரசின் உரிய வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வெளிப்படைத்தன்மையுடன் தாமதமின்றி விரைவாக கட்டட அனுமதி பெறுதல் தொடர்பாக பதிவு பெற்ற லைசென்ஸ்டு சர்வேயர்கள் மற்றும் பொறியாளர்களுடனான *(Licensed Surveyors & Registered Engineers)* ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று *(20.08.2026)* ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டுவதற்கான அனுமதியினை மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் கையூட்டு ஏதுமின்றி விரைவாக வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், கட்டட அனுமதியினை விரைவாக வழங்குவதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி மாநகராட்சியின் நகரமைப்புப் பிரிவின் சார்பில் தற்போது அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கட்டடம் கட்டுவதற்கான அனுமதியினை உரிய வரைபடம் மற்றும் ஆவணங்களுடன் அங்கீகாரம் பெற்ற லைசன்ஸ் சர்வேயர்கள் மற்றும் பொறியாளர்கள் *(Licensed Surveyors and Registered Engineers)* அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றி மாநகராட்சிக்கு விண்ணப்பித்திட வேண்டும். மாநகராட்சியில் அனுமதி வழங்குவது தாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக, ஏற்கனவே மாநகராட்சியின் நகரமைப்புப் பிரிவின் மீது இருந்த பல்வேறு புகார்கள் அடிப்படையில், நகரமைப்புப் பிரிவில் இருந்த அனைவரும் மாற்றப்பட்டுள்ளனர். மேலும், நகரமைப்புப் பிரிவில் புகார்கள் வரப்பெற்றதன் அடிப்படையில், ஏற்கனவே காவல்துறையில் சிலர் மீது புகார் அளிக்கப்பட்டும், ஒழுங்கு நடவடிக்கையும்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பிரிவிற்கு புதிதாக அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாமல் கட்டட அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அதை சரிசெய்திட கோரி மீண்டும் திருப்பி அனுப்பப்படுகிறது. இதன் காரணமாக அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே, அனுமதிக்காக அனுப்பப்படும் வரைபடம் மற்றும் விண்ணப்பங்களை சரியான முறையில் உரிய ஆவணங்களை வைத்து விண்ணப்பிப்பது அவசியமாகும். இதில் தவறு செய்யும் அதிகாரிகள் மீது மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதைப் போல தவறான அணுகுமுறையுடன் விண்ணப்பிப்பதை அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர்கள் மற்றும் பொறியாளர்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும். இதனையும் மீறி தவறான அணுகுமுறை மேற்கொள்பவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விரைவில் அரசால் Universal Scrutiny Engine உருவாக்கப்படவுள்ளது. அப்பொழுது மேலும் எளிமையாக விண்ணப்பித்து அனுமதியினைப் பெற முடியும். மக்களுக்கு குடும்ப அட்டை, வருவாய் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட சேவைகளுக்கு விண்ணப்பித்து எளிதில் கிடைப்பதை போல கட்டடத்திற்கான அனுமதியும் மக்களுக்கு எளிதில் கிடைத்திட வேண்டும். அதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை அனைவரும் பின்பற்றினால் அனுமதி மிகவும் எளிதாக கிடைக்கும். தாமதமும் தவிர்க்கப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (பொது) திரு.பி.சங்கரவேலு, கண்காணிப்புப் பொறியாளர் (நகரமைப்பு) திரு.கே.இம்தியாஸ் அகமது, செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி, நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) திரு.தா.இளையஅருணா, உறுப்பினர்கள் திரு.எஸ்.பாஸ்கரன், திரு.க.ஏகாம்பரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**